இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 326 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 22 – சனிக்கிழமை 06 ஜுலை 2024 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 326 : Thiruvalluvar Year - 2055 - Aani 22 - Saturday 06 July 2024 - Madurai 10 Pages ₹ 5.00

# சமூக நீதிக்குத் துரோகம் இழைப்பவர்களுக்கு தக்க பாடம் புகட்டுங்கள்!

## விக்கிரவாண்டி தொகுதி வாக்காளர்களுக்கு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள் !

**சென்னை, ஜூலை 6–**

**“சமூக நீதிக்கு எதிரான பா.ஜ.க. கூட்டணியை தோற்கடிப்பதன் மூலமாக சமூக நீதிக்கு துரோகம் இழைப்பவர்களுக்கு தக்க பாடம் புகட்டுங்கள்” என்று விக்கிர வாண்டி தொகுதி வாக்காளர்களுக்கு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**இதுதொடர்பாக அவர் தமது சமூக வலைதளப் பக்கத்தில் காணொலி மூலம் உரையாற்றுகையில், “உங்கள் சின்னம் உதயசூரியன், வாக்களிப்பீர் உதயசூரியன்” என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.**

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள சமூக வலைதளக் காணொலியில் ஆற்றிய உரை வருமாறு:–

“சாதனைகளால் தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் @arivalayamத்தின் வேட்பாளராக விக்கிரவாண்டி தொகுதியில் போட்டியிடும் அன்னியூர் சிவா அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றிபெறச் செய்யுங்கள்!

இவ்வாறு பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் கழக வேட்பாளரை ஆதரிக்க வலியுறுத்தி வெளியிட்ட காணொலி காட்சி உரை வருமாறு:–

விக்கிரவாண்டி மக்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்!

வரும் ஜூலை 10ஆம் நாள் நடைபெறவுள்ள விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றல்மிக்க வேட்பாளர் அன்னியூர் சிவா என்கிற சிவசண்முகத்துக்கு, உங்கள் உள்ளம் கவர்ந்த உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



### மக்கள் தொண்டர் அன்னியூர் சிவா!

‘இந்தியா’ கூட்டணியின் வேட்பாளராகப் போட்டியிடும் அன்னியூர் சிவா என்கிற சிவசண்முகத்தை உங்களுக்கு தனியாக அறிமுகம் செய்ய வேண்டியதில்லை! உங்கள் மண்ணின் மைந்தர் அவர்! மக்களோடு மக்களாக, மக்கள் பணியாற்றும் மக்கள் தொண்டர்தான் அன்னியூர் சிவா.

1986ஆம் ஆண்டு முதல், அன்னியூர் சிவாவை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். தடம் மாறாத நிறம் மாறாத கலைஞரின் உடன்பிறப்புகளில் அவரும் ஒருவர். தலைவர் கலைஞரின் பாணியில் சொல்ல வேண்டும் என்றால், ”தன்னால் கழகத்துக்கு என்ன லாபம் என்பதை மட்டுமே சிந்திக்கும் ரத்த நாளங்களில் ஒருவர்”.

★ விழுப்புரம் மாவட்டம் காணை ஒன்றிய இளைஞர் அணித் துணை அமைப்பாளராக

★ ஒன்றுபட்ட மாவட்டத் தலைமைப் பொதுக்குழு உறுப்பினராக

★ அன்னியூர் கூட்டுறவு விவசாய வங்கித் தலைவராக

★ மாநில விவசாய அணி துணைச் செயலாளராக என்று பல்வேறு பொறுப்புகளை வகித்த அவர், தற்போது விவசாயத் தொழிலாளர் அணியின் மாநிலச் செயலாளராக பொறுப்பு வகித்துக் கொண்டிருக்கிறார்.

இப்படிப்பட்ட அன்னியூர் சிவா அவர்களை, விக்கிரவாண்டி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்து அனுப்பி வையுங்கள் என்று அன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன். அன்போடு மட்டுமல்ல; உரிமையோடும் கேட்டுக் கொள்கிறேன்.

### 1.48 லட்சம் பெண்களுக்கு புதியதாக உரிமைத் தொகை!

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், கடந்த மூன்றாண்டு காலத்தில் செய்து தரப்பட்டிருக்கும் நலத்திட்டங்களை விவரித்து சொல்ல வேண்டும் என்றால் நேரம் போதாது!

★ 1 கோடியே 16 லட்சம் மகளிர் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை பெறுகிறார்கள்.

இந்த மாதத்தில் இருந்து புதிதாக 1லட்சத்து 48 ஆயிரம் பெண்களுக்கு மகளிர் உரிமைத் தொகை தரப் போகிறோம்!

★ மகளிருக்குக் கட்டணமில்லா பேருந்து வசதி செய்து தரப்பட்டிருக்கிறது.

★ ’நான் முதல்வன்’ திட்டத்தின் மூலமாக, இளைஞர்கள் அனைத்து வேலைகளையும் பெற தகுதி உள்ளவர்களாக உயர்த்தப்பட்டு வருகிறார்கள்.

★ ‘புதுமைப்பெண் திட்டம்’ மூலமாக, அரசுப் பள்ளியில் படித்து கல்லூரிக் கல்விக்கு வரும் மாணவியருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது.

★ இதே மாதிரி, மாணவர்களுக்கும் ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டம் மூலமாக தரப் போகிறோம்.

இப்படி, ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஏதாவது ஒரு நேரடி பலன் கிடைக்கும் வகையில், நம்முடைய அரசு செயல்பட்டு வருகிறது.

### கழக அரசு என்றாலே சமூக நீதி அரசு!

திராவிட முன்னேற்றக் கழக அரசு என்றாலே, சமூகநீதி அரசு! இது உங்கள் எல்லோருக்கும் நன்றாக தெரியும்!

**★ பிற்படுத்தப்பட்டோருக்கு தனித்துறையை உருவாக்கியதே தலைவர் கலைஞர்தான்.**

**★ வன்னியர் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு 20 விழுக்காடு உள்ஒதுக்கீடு வழங்கிய ஆட்சி, தி.மு.க. ஆட்சி!**

**★ பட்டியலின சமூகங்களின் இடஒதுக்கீட்டை அதிகரித்த ஆட்சி, தி.மு.க. ஆட்சி.**

★ பிற்படுத்தப்பட்டோருக்கு தனித் துறையை உருவாக்கியதே தலைவர் கலைஞர்தான்.

★ வன்னியர் உள்ளிட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தினருக்கு 20 விழுக்காடு உள்ஒதுக்கீடு வழங்கிய ஆட்சி, தி.மு.க. ஆட்சி!

★ பட்டியலின சமூகங்களின் இடஒதுக்கீட்டை அதிகரித்த ஆட்சி, தி.மு.க. ஆட்சி.

★ அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளை, ‘சமத்துவ நாளாக’ அறிவித்திருக்கிறோம்!

★ கழகம் வளர்த்த கொள்கைக் குன்றான ஏ.கோவிந்தசாமி அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது.

★ 1987ஆம் ஆண்டு நடைபெற்ற போராட்டத்தில், துப்பாக்கிச்சூட்டில் பலியான சமூகநீதிப் போராளிகளுக்கான நினைவகம் கட்டிக் கொண்டிருக்கிறோம்.

இது இரண்டையும் சீக்கிரமே விழுப்புரத்தில் நான் திறந்து வைக்க இருக்கிறேன்.

★ கழகத் துணைப் பொதுச்செயலாளரும் உயர்கல்வித் துறை அமைச்சருமான பொன்முடி அவர்களும், மறைந்த சட்டமன்ற உறுப்பினரான புகழேந்தி அவர்களும் இந்த மாவட்டத்துக்கும், தொகுதிக்கும் ஏராளமான திட்டங்களை கொண்டு வந்திருக்கிறார்கள்.

### நலத்திட்டங்கள் தொடர ஆதரவு வேண்டும்!

எல்லா மக்களுக்கும் பொதுவான மக்கள் நலத்திட்டங்கள் தொடர, உங்களின் ஆதரவை வேண்டி நிற்கிறோம்.

சமூகநீதிக்கு எதிரான பா.ஜ.க. கூட்டணியை தோற்கடிப்பது மூலமாக, சமூக நீதிக்கு துரோகம் இழைப்பவர்களுக்கு தக்க பாடம் புகட்டுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கழகத்தின் உண்மைத் தொண்டரான அன்னியூர் சிவா என்ற சிவசண்முகம், விக்கிரவாண்டி தொகுதி மக்களுக்கும் உண்மையான சட்டமன்ற உறுப்பினராக இருப்பார்!

மறவாதீர், உங்கள் சின்னம் உதயசூரியன்! வாக்களிப்பீர் உதயசூரியன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது காணொலி உரையில் குறிப்பிட்டுள்ளார்.

---

### ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசின் மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்து – சென்னையில் இன்று

# கழக சட்டத்துறை சார்பில் மாபெரும் உண்ணாவிரத அறப்போர்!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் துவக்கி வைக்கிறார்! ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் – அரசியல் கட்சியினர் சிறப்புரை! ஆ.இராசா எம்.பி. நிறைவுரை! மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமை !

**சென்னை, ஜூலை 6–**

**அரசியல் அமைப்பிற்கு எதிரான; ஜனநாயகத்திற்கு விரோதமான ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசால் அமல்படுத்தப்பட்டுள்ள மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்து இன்று (6.7.2024) சென்னை, ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகில் தி.மு.க. சட்டத் துறை சார்பில் “மாபெரும் உண்ணாவிரத அறப் போராட்டம்” நடைபெறுகிறது.**

**இந்த ஆர்ப்பாட்டத்தில் கழக வழக்கறிஞர்கள் பெருமளவில் பங்கேற்குமாறு தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி., அறிக்கை விடுத்துள்ளார்.**

அவரது அறிக்கை வருமாறு:–

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி,

இந்திய திருநாட்டின் நீதி பரிபாலனத்திற்கும் மாநில சுயாட்சிக்கும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் எதிரானது என்பதோடு, இச்சட்டங்கள் ஜனநாயக நாடாக திகழும் நம் இந்திய திருநாட்டினை, ‘காவல்துறை ஆட்சி நாடாக” மாற்றிவிடும் அரசியல் அமைப்பிற்கு எதிரான ஜனநாயகத்திற்கு விரோதமான ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசால் அமல்படுத்தப்பட்டுள்ள மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்து;

தி.மு.க. சட்டத்துறையின் சார்பில், எனது (தி.மு.க.சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, எம்.பி.,) தலைமையில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அமைச்சர் மா.சுப்பிரமணியன், தி.மு.க. சட்டத் துறைத் தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை, சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலையில் – சட்டத் துறை இணைச் செயலாளர் கே.எஸ். இரவிச்சந்திரன், (முன்னாள் எம்.எல்.ஏ.,) வரவேற்புரையில் கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் துவக்கி வைத்திட – ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம், எம்.பி., தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் கு.செல்வப்பெருந்தகை, எம்.எல்.ஏ., மார்க்சிஸ்ட் கட்சியின் தமிழ்மாநிலக்குழுச் செயலாளர் கேபாலகிருஷ்ணன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திருச்சி சிவா, எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்மாநிலக்குழு செயலாளர் இரா.முத்தரசன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சித் தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர் மொய்தீன், மூத்த பத்திரிகையாளர்கள் இந்து என்.ராம், ஏ.எஸ்.பன்னீர்செல்வம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச்.ஜவாகிருல்லா, எம்எல்.ஏ., தலைமைக் கழக சட்ட தலைமை ஆலோசகர் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், எம்.பி., கழக சட்டதிட்டத் திருத்தக் குழுச் செயலாளர் வழக்கறிஞர் இரா. கிரிராஜன், எம்.பி., ஆகியோர் சிறப்புரையாற்றிட – கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா, எம்.பி., நிறைவுரையாற்றிட – சட்டத்துறை துணைச் செயலாளர்கள் ஜே.பச்சையப்பன், கே.சந்துரு ஆகியோர் நன்றியுரை ஆற்றிட – தி.மு.க. சட்டத்துறை மாநில நிர்வாகிகள் மற்றும் தலைமைக் கழக வழக்கறிஞர்கள், சென்னை மாவட்டங்களைச் சேர்ந்த வழக்கறிஞர் அணி அமைப்பாளர்கள் ஒருங்கிணைப்பில்;

இன்று (06.07.2024 - சனிக்கிழமை) காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை, சென்னை, எழும்பூர், இராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகில் “மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம்” நடைபெற உள்ளது.

இந்த உண்ணாவிரத அறப்போராட்டத்தில் மாநில, மாவட்ட, நீதிமன்ற தி.மு.க. வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் கழக வழக்கறிஞர்கள் மற்றும் கழக முன்னணியினர் தோழர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு பாசிச ஒன்றிய பாஜக அரசு அமல்படுத்தியுள்ள மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்து தங்கள் கண்டனத்தைப் பதிவு செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு என்.ஆர்.இளங்கோ எம்.பி. தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.